Class-10

# Tamil (AT)

GENERAL EDUCATION DEPARTMENT

SAMAGRA SHIKSHA, KERALA

# சமக்ரா சிக்ஷா, கேரளம்

## வினாவங்கி

## வகுப்பு : 10 தமிழ் முதல்தாள் (AT)

**ஒரு மதிப்பெண்களுக்கான வினாக்கள்.**

1. ஐம்புலன்களில் ஒன்று

(அ) விரல் (ஆ) தலை

(இ) வாய் (ஈ) கால்

**விடை : (இ) வாய்**

2. ராப்பநூயி என்று அழைக்கப்படும் தீவு

(அ) இலட்சத்தீவு (ஆ) ஈஸ்டர் தீவு

(இ) அந்தமான் தீவு (ஈ) நிக்கோபர் தீவு

**விடை : (ஆ) ஈஸ்டர்தீவு**

3. பசுமைவனத்தை உருவாக்கிய ஜாதவுக்கு வழங்கப்பட்ட விருது

(அ) பத்மஸ்ரீ (ஆ) பத்மபூஷன்

(இ) பாரதரத்னா (ஈ) பத்மவிபூஷன்

**விடை : (அ) பத்மஸ்ரீ**

4. ‘மோய்’ சிலைகள் அமைந்திருக்கும் கடற்கரை

(அ) மெரீனா (ஆ) கோவா

(இ) அனகீனா (ஈ) கோவளம்

**விடை : (இ) அனகீனா**

5. ஜாதவ் உருவாக்கிய காடு ________ என அழைக்கப்படுகிறது.

(அ) ஆர்க்காடு (ஆ) மொலாய்காடு

(இ) பனிக்காடு (ஈ) மணல்காடு

**விடை : (ஆ) மொலாய்காடு**

6. “சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்”
என்று உரைத்தவர்.

(அ) கண்ணதாசன் (ஆ) பாரதியார்

(இ) கவிதாசன் (ஈ) வைரமுத்து

**விடை : (ஆ) பாரதியார்**

7. “உப்பு” எனும் மலையாளக் கவிதையின் ஆசிரியர்

(அ) வள்ளத்தோள் (ஆ) குமாரன் ஆசான்

(இ) ஓ.என்.வி. குறுப்பு

**விடை : (இ) ஓ.என்.வி. குறுப்பு**

8. “நடந்தான்” எனும் சொல்லில் நட என்பது __________ உறுப்பு ஆகும்.

(அ) பகுதி (ஆ) சாரியை

(இ) விகுதி (ஈ) இடைநிலை

**விடை : (அ) பகுதி**

9. “பசி வந்தால் பத்தும் பறந்து போகும்” எனும் பழமொழி கருத்து உடைய நூல்

(அ) மணிமேகலை (ஆ) கம்பராமாயணம்

(இ) சிலப்பதிகாரம் (ஈ) சீவக சிந்தாமணி

**விடை : (அ) மணிமேகலை**

10. வீரத்தால் மக்கள் மனதை கவர்ந்தவன்

(அ) புரூட்டஸ் (ஆ) அந்தோணி

(இ) காசியஸ் (ஈ) சீசர்

**விடை : (ஈ) சீசர்**

11. தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு

(அ) 2004 (ஆ) 2006

(இ) 2009 (ஈ) 2013

**விடை : (அ) 2004**

12. தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தவன் என பாரதியார் குறிப்பிடும் வேதியன்

(அ) நன்னூலார் (ஆ) அகத்தியர்

(இ) தொல்காப்பியர் (ஈ) இளங்கோவடிகள்

**விடை : (ஆ) அகத்தியர்**

13. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரவாறு கொண்டிருந்தும் இன்று வழக்கு இழந்துபோன மொழி.

(அ) சமஸ்கிருதம் (ஆ) இலத்தீன்

(இ) தமிழ் (ஈ) கிரேக்கம்

**விடை : (ஆ) இலத்தீன்**

14. தசரதனுக்கும் கைகேயிக்கும் பிறந்த புதல்வன்.

(அ) இலட்சுமணன் (ஆ) இராமன்

(இ) சத்ருக்கனன் (ஈ) பரதன்

**விடை : (ஈ) பரதன்**

15. ஆங்கில நாடக எழுத்தாளர் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள்

(அ) 35 (ஆ) 33

(இ) 37 (ஈ) 39

**விடை : (இ) 37**

**இரண்டு மதிப்பெண்களுக்கான வினாக்கள்.**

16. **ஏற்றபடி இணைத்து எழுதுக.**

(அ) சிறுபாணாற்றுப்படை - அகப்பாட்டாகவும் புறப்பாட்டாகவும் கருதப்படும் நூல்

(ஆ) பட்டினப்பாலை - பத்துப்பாட்டில் மிகப்பெரிய நூல்

(இ) நெடுநல்வாடை - காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினைப் பாடும் நூல்

(ஈ) மதுரைக்காஞ்சி - பரிசில் பெறும் பொருட்டு வழிப்படுத்தப்படும் நூல்

**விடை :**

(அ) சிறுபாணாற்றுப்படை - பரிசில் பெறும் பொருட்டு வழிப்படுத்தப்படும் நூல்

(ஆ) பட்டினப்பாலை - காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினைப் பாடும் நூல்

(இ) நெடுநல்வாடை - அகப்பாட்டாகவும் புறப்பாட்டாகவும் கருதப்படும் நூல்

(ஈ) மதுரைக்காஞ்சி - பத்துப்பாட்டில் மிகப்பெரிய நூல்

17. **ஏற்றபடி இணைத்து எழுதுக.**

(அ) வாய் - முதற்சேம்பின் முளை இஞ்சி
(ஆ) கண் - பரதவர் மகளிர் குரவையோடு ஒலிப்ப
(இ) மூக்கு - கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின்
(ஈ) செவி - கருநனைக் காயாக் கணமயில் அவிழவும்.

**விடை :**

(அ) வாய் - கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின்
(ஆ) கண் - கருநனைக் காயாக் கணமயில் அவிழவும்.
(இ) மூக்கு - முதற்சேம்பின் முளை இஞ்சி
(ஈ) செவி - பரதவர் மகளிர் குரவையோடு ஒலிப்ப

18. **ஏற்றபடி இணைத்து எழுதவும்.**

கலிங்கத்து பரணி - சமண முனிவர்கள்
மணிமேகலை - செயங்கொண்டார்
நாலடியார் - குலசேகர ஆழ்வார்
பெருமாள் திருமொழி - சீத்தலைச் சாத்தனார்

**விடை :**

கலிங்கத்து பரணி - செயங்கொண்டார்
மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார்
நாலடியார் - சமண முனிவர்கள்
பெருமாள் திருமொழி - குலசேகர ஆழ்வார்

19. **ஏற்றபடி இணைத்து எழுது.**

| **நூல் வகை** | | **நூல்** |
|---|---|---|
| பதினெண் கீழ்க்கணக்கு | - | கலிங்கத்துப்பரணி |
| சிற்றிலக்கியம் | - | மணிமேகலை |
| ஐம்பெருங்காப்பியம் | - | பெருமாள் திருமொழி |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் | - | நாலடியார் |

**விடை :**

| **நூல் வகை** | | **நூல்** |
|---|---|---|
| பதினெண் கீழ்க்காணக்கு | - | நாலடியார் |
| சிற்றிலக்கியம் | - | கலிங்கத்துப்பரணி |
| ஐம்பெருங்காப்பியம் | - | மணிமேகலை |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் | - | பெருமாள் திருமொழி |

20. **கீழே தரப்பட்டுள்ள பத்தியை வாசித்து திருந்திய நடையில் எழுதவும்.**

"இவனப் போல புள்ளைங்க பள்ளிக்கூடத்தில் சேந்துட்டுது. இவன சேக்க மாட்டீங்கிராங்க. கடைசித் தெருநெட்டசி மகன் மூல கலங்கினாலும் பள்ளியில் சேர்த்து கிட்டாங்க. யாருக்கும் தொந்தரவு குடுக்குறதில்ல. சொன்ன இடத்துல மணிக்கணக்கா ஒக்காந்து இருக்கான். அந்தப் பையன் போல இவனையும் எங்கேயாவது சேர்த்துக்கிட்டா நல்லா இருக்கும்"

**விடை :**

இவனை போன்ற பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து விட்டார்கள். இவனை சேர்த்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். கடைசி தெரு நெட்டச்சி மகன் மூளை கலங்கியவனாக இருந்தாலும் பள்ளியில் சேர்த்துக் கொண்டார்கள். யாருக்கும் தொந்தரவு கொடுப்பது இல்லை. கூறிய இடத்தில் மணிக்கணக்காக அமர்ந்து கொள்கிறான். இவனையும் எங்காவது சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.

21. **கீழே தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பகுபதம் பகாபதம் சொற்களை வேறுபடுத்தி எழுதுக.**

(நடந்தான், வா, பாடு, செய்தார், கண்டு, ஆடினார், ஓடி, நின்றார்)

**விடை :**

பகுபதம். - நடத்தான், செய்தார், ஆடினார், நின்றாள்.
பகாப்பதம். - வா, பாடு, கண்டு, ஓடி.

22. **கீழே தரப்பட்டுள்ள வட்டார சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

(கூட்டாளி, மப்பில் இருந்த, நாஷ்டா, கத்திப் பேசுதல், கொட்டாய், வண்டை வண்டையாக, பொம்பளைகள், டீசண்டாக).

**விடை :**

| | | |
|---|---|---|
| கூட்டாளி | - | நண்பன் |
| மப்பில் இருந்த | - | போதையில் இருந்த |
| நாஷ்டா | - | காலை உணவு |
| கத்தி பேசுதல் | - | உரக்கப் பேசுதல் |
| கொட்டாய் | - | குடிசை |
| பொம்பளைகள் | - | பெண்கள் |
| டீசண்டாக | - | நாகரீகமாக |

23. **தரப்பட்டுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி பொருள் எழுதுக.**

(நேத்திரம், காலன், வலியாலும், தாரணி, இசை, திக்கு, அஞ்சுதல், நிகர்)

**விடை :**

| | | |
|---|---|---|
| அஞ்சுதல் | - | பயத்தல் |
| இசை | - | புகழ் |
| காலன் | - | எமன் |
| தாரணி | - | உலகம், பூமி |
| திக்கு | - | திசை |
| நேத்திரம் | - | கண்கள் |
| வலியாலும் | - | வலிமையாலும் |

**மூன்று மதிப்பெண்களுக்கான வினாக்கள்.**

24. **அகரவரிசைப்படுத்தி பொருள் எழுதுங்கள்.**

வையகம், பெயல், கழை, வேழம்

**விடை :**

| | | |
|---|---|---|
| கழை | - | மூங்கில் |
| பெயல் | - | மழை |
| வேழம் | - | யானை |
| வையகம் | - | உலகம் |

25 "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

- இக்குறளில் இடம்பெற்றுள்ள அணி எது? விளக்கம் தருக.

**விடை :**

சொற்பொருள் பின்வருநிலையணி

**விளக்கம்:** 'சொல்' - என்ற சொல் திரும்பத் திரும்ப வந்து தந்த பொருளே தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

26 2014ஆம் ஆண்டிற்கான சாகித்ய, அகாதமி விருது பெற்ற நூல் 'அஞ்ஞாடி'. பூமணி என்பவரால் எழுதப்பட்ட இந்நூல் நாவல் வகையைச் சார்ந்தது. 2014ஆம் ஆண்டு திருவள்ளுவர் பதிப்பகத்தார் இந்நூலை வெளியிட்டுள்ளனர். 1066 பக்கங்கள் கொண்ட இதன் விலை 350 ரூபாய்.

- இதற்கான நூலடைவு தயார் செய்யுங்கள்.

**விடை :**

| நூலடைவு | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | அஞ்ஞாடி |
| நூலாசிரியர் பெயர் | - | பூமணி |
| நூல் வகை | - | நாவல் |
| பதிப்பகம் | - | திருவள்ளுவர் பதிப்பகம் |
| பதிப்பித்த ஆண்டு | - | 2014 |
| விருது | - | சாகித்ய அக்காடமி |
| பக்கங்கள் | - | 1066 |
| விலை | - | 350 ரூபாய் |

27. உலக வனப்பாதுகாப்பு நாளான மார்ச் 21 ஆம் நாள், உங்கள் பள்ளியில் நடைபெறும் விழிப்புணர்வு மூகாமிற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

**விடை :**

**சுவரொட்டி**

**விழிப்புணர்வு முகாம்**

**உலக வனப்பாதுகாப்பு நாள்**

| | | |
|---|---|---|
| இடம் | : | பள்ளி மைதானம் |
| நாள் | : | மார்ச் 21 |
| நேரம் | : | காலை 10 மணி |

அறிவியல் மன்றம்

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

28 ஈஸ்டர் தீவிலுள்ள ‘மோய்’ சிலைகள் பற்றி சிறு குறிப்பு எழுதுங்கள்.

**விடை :**

**மோய் சிலைகள் - சிறுகுறிப்பு**

ஈஸ்டர்தீவிலுள்ள மக்கள், அங்குள்ள எரிமலைப்பாறைகளில் மிகப்பெரிய சிற்பங்களைச் செதுக்கி, அவற்றை அனகீனா கடற்கரையில் நிறுத்தி உள்ளனர். 6 அடிமுதல் 30 அடிவரை உயரமுள்ள இச்சிலைகளை ‘மோய்’ என அழைக்கின்றனர். அங்குள்ள மக்கள்

இச்சிலைகளை தங்கள் முன்னோர்களாகவும் அவர்களை ஆபத்துக்களிலிருந்து காப்பவர்களாகவும் கருதுகின்றனர்.

29 பெருகிவரும் கற்றுச்சூழல் மாசுபாடுகள் இருள்மயமான எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. சுற்றுச்சூழல் தினத்தன்று "இயற்கையை பாதுகாப்போம்" என்னும் கருத்தை மேற்கொள்ளும் நோக்கில் உறுதிமொழி ஒன்று தயார் செய்யுங்கள்.

**விடை :**

## உறுதிமொழி

இயற்கை ஒரு வரம். இயற்கையில்லையேல் மனிதவாழ்க்கைக்கு நிலையில்லை. இயற்கையையும் நமது சுற்றுப்புறத்தையும் பாதுகாக்கவேண்டியது நமது தலையான கடமையாகும். இதனை நன்கு உணர்ந்து செயல்படுவேன். இயற்கையிலுள்ள நிலம், நீர் காற்று இவற்றை மாசுபடுத்தாமல் பாதுகாப்பேன் என உறுதி கூறுகிறேன்.

30. உமது பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் நடைபெறவிருக்கும் இலக்கியப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்வதற்கான சுற்றறிக்கை ஒன்று தயார் செய்க.

**விடை :** **சுற்றறிக்கை**

அன்பார்ந்த மாணவர்களே,

வருகிற டிசம்பர் 11 ஆம் தேதி "தேசியக்கவி", "மகாகவி" என்று அழைக்கப்படும் தமிழ் மொழியின் ஈடு இணையற்ற **கவிஞர் பாரதியார்** பிறந்தநாள் விழா பள்ளி தமிழ் பன்றத்தின் சார்பில் நடைபெற உள்ளது. விழாவை பிரபல எழுத்தாளர் **சு.சண்முகசுந்தரம்** அவர்கள் துவங்கி வைக்க உள்ளார். இவ்விழாவை முன்னிட்டு நமது பள்ளியில், தமிழ் இலக்கிய கதை, கவிதை, கட்டுரை போட்டிகள் நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் பங்கு பெற விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயரை டிசம்பர் மாதம் 3-ஆம் தேதிக்கு முன்பாக இலக்கிய மன்ற செயலாளர் இடம் பதிவு செய்யும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு:

'தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும்'.

இப்படிக்கு,<br>
நாள் : 29.11.2020 தமிழ் இலக்கிய<br>
மன்றச் செயலாளர்.

31. **கீழே தரப்பட்டுள்ள விளம்பரத்தை படித்து நூலடைவு தயார் செய்க.**

தமிழ் வாசகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

வாங்கிவிட்டீர்களா!.....

ஆசிரியர் **முடியரசன்** அவர்கள் எழுதிய **தாய்மொழி காப்போம்** எனும் நூலின் 2019 ஆம் ஆண்டின் பதிப்பு வெளியீடு!

ஆயிரம் பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை 65 ரூபாய் மட்டுமே! கோ. இளவழகன் அவர்களை பதிப்பாளராக கொண்டு தமிழ்மண் பதிப்பகத்தின் (சென்னை) வெளியீடு.

**விடை :**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழ் மொழி காப்போம் |
| நூலின் வகை | : | கட்டுரை |
| ஆசிரியர் | : | முடியரசன் |
| ஆண்டு | : | 2020 |
| பக்கங்கள் | : | 1000 |
| விலை | : | ரூபாய் 165/- |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| பதிப்பகம் | : | தமிழ்மண் பதிப்பகம்<br>சென்னை |

32. **கீழே தரப்பட்டுள்ள பத்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

**“வீறுடை செம்மொழி தமிழ் மொழி உலகம்**
**வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி”**

என்று தமிழின் பெருமையை பறைசாற்றுகின்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழ், மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இலக்கிய வளமிக்க மொழி, காலத்தால் மூத்த தமிழ் மொழி, தனித்தன்மையால் மிடுக்குற்றுசெம்மொழியாய் திகழ்கிறது. திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி தமிழ் செம்மொழியாம் என்று பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, மும்மை, தூய்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு

செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி. அதுவே நம் மொழி தமிழ் மொழி என்பார் பாவாணர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்பார் பாரதியார். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த மூத்த மொழி நம்முடைய தமிழ்மொழியே ஆகும்.

**வினாக்கள்**

1. பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழின் பெருமையை எவ்வாறு பறைசாற்றுகிறார்?
2. பாரதியார் கூறும் தமிழ் மொழியின் சிறுப்பு பற்றி கூறுக.
3. ஒரு மொழி செம்மொழி தகுதி பெறுவதற்கு என்னவெல்லாம் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்?

**விடை :**

(1) உலகம் தோன்றிய நாள்முதல் வீறுகொண்ட செம்மொழியாக தமிழ்மொழி விளங்குகின்றது என்று தமிழின் பழமையை பெருமையை பறைசாற்றுகிறார் பாலவரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். மேலும், மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இலக்கிய வளமிக்க மொழி என்றும் கூறுகின்றார்.

(2) தான் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிமையான மொழி இவ்வுலகில் எங்கும் இல்லை என்று பல்வேறு மொழிகளில் புலமை வாய்ந்த பாரதியார் கூறுகின்றார்.

(3) தொன்மை முன்மை நுண்மை திண்மை எண்மை ஒண்மை இனிமை தனிமை இளமை வளமை தாய்மை தூய்மை மும்மை செம்மை இயன்மை வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டு இருந்தால் அது செம்மொழியாகும் என்கிறார் பாவாணர்.

33. "மண்ணில் கிடந்து புரளும்.
காணாமல் போன
தன் குழந்தையை நினைத்து
நெஞ்சில் சுரக்கும் பால்
எங்கும் நிற்காது ஒடி பரந்து
அதில்
முழுகி இறக்கும் ஒரு
அம்மாவை
கண்டேன் நான்."

உப்பு எனும் கவிதையில் ஆசிரியர் ஓ.என்.வி. குறுப்பு அவர்களின் ஆதங்கத்தை சிறு குறிப்பாக வெளியீடுக.

**விடை :**

உப்பு எனும் கவிதையில் ஆசிரியர் ஓ.என்.வி.குறுப்பு சமையலறையில் உப்பின் பயன்பாட்டையும் நன்றி உணர்வை காட்டுவதற்கு உப்பு எடுத்துக்காட்டாக இருப்பதையும் இக்கவிதை மூலம் கூறுகிறார். இக்கவிதையில் உப்பு உணவில் காணாமல் மறைந்து போவதும் அதனுடைய கவை மறையாமல் இருப்பதும்போன்று பாட்டியும் ஒரு நாள் மறைந்து போனாலும் அவளுடைய நினைவு மனதில் என்றும் நிற்கும் என்றும் கூறுகின்றார். மேலும் உப்பு காய்ச்சப்படும் இடமான கடல் எத்தனையோ உயிர்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கின்றது ஆனால் சில நேரங்களில் கடல் எனும் மீனவர்களின் தாய் கொந்தளிப்பு ஏற்பட்டால் அனைத்து உயிர்களையும் தனக்குள்ளே எடுத்துக் கொள்கின்றாள் அதுபோன்று கடல் கொந்தளித்த ஒரு நாளில் காணாமல் போன தன்னுடைய குழந்தையை எண்ணி ஒரு தாய் ஆறாத் துயரம் அடைகின்றாள். குழந்தை பிரிந்த வேதனையை மறக்க முடியாமல் அவளும் இறந்து போகின்றாள் இக்காட்சி ஆசிரியருடைய மனதை விட்டு நீங்காமல் இருக்கின்றது. அதை அழகாக கவிதை வரிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் எதுவும் நிலை இல்லாத இவ்வுலகில் நன்மை இருப்பதுபோன்று தீமைகளும் இருக்கின்றது என்பதை ஆசிரியர் அழகாக கட்டிச் செல்கிறார். உப்பு எனம் சாதாரண ஒரு பொருளை கவிதையின் மையமாக வைத்து ஆசிரியர் உலக தத்துவத்தை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

34. தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற முதல் கேரள எழுத்தாளர் ஆ.மாதவன் அவர்களை நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் ஒன்று தயார் செய்க (6 வினாக்கள்)

**விடை :**

(1) தமிழ் மொழி மீதும் தமிழ் இலக்கியம் மீது ஆர்வம் ஏற்பட காரணம் என்ன?

(2) தமிழ்மொழி இலக்கியத்திற்கும் மலையாள மொழி இலக்கியத்திற்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றிக் கூறுங்களேன்?

(3) மலையாள மொழி எழுத்தாளர்களின் படைப்புகள் திரைப்படம் ஆக்கப் படும் அளவிற்கு தமிழ் மொழியில் நடைபெறுவதில்லை காரணம் என்ன?

(4) தமிழ் மொழியில் உங்களைக் கவர்ந்த எழுத்தாளர்கள் யார் காரணம் என்ன?

(5) கேரளா தமிழ் எழுத்தாளரான நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி கூறுங்களேன்?

(6) இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் கருத்துக்கள் எவை?

**நான்கு மதிப்பெண்களுக்கான வினாக்கள்.**

35. ஈஸ்டர் தீவின் சிறப்புக்களைப்பற்றி கற்றுக் கொண்ட நீங்கள் அத்தீவினைப்பற்றி விளக்கி உங்கள் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

**விடை :**

**நண்பனுக்குக்கடிதம்**

பொள்ளாச்சி,
10.2.2021.

அன்புள்ள நண்பன் / தோழிக்கு,

நலம். நலமறிய ஆவல்.

ஈஸ்டர் தீவைப்பற்றியும் அங்குள்ள மக்களைப்பற்றியும் நான் என் தமிழ் புத்தகத்தின் வாயிலாக தெரிந்து கொண்டேன். அந்த செய்திகளைப்பற்றி உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஈஸ்டர்தீவு என்பது பசுவிக் பெருங்கடலில் உள்ள ஒரு தனிமையான தீவு ஆகும். ராப்பநூயி என்றும் இத்தீவு அழைக்கப்படுகிறது. எரிமலைப்பாறைகளில் 6 அடிமுதல் 30 அடி உயரமுடைய சிற்பங்களை செதுக்கி வைத்துள்ளனர். இந்த சிலைகளை அங்குள்ள மக்கள் மோய் என்று அழைக்கின்றனர். அத்தீவின் மக்கள் இந்த சிலைகளை தங்கள் முன்னோர்களாகவும் அவர்களை ஆபத்துக்களிலிருந்து காப்பவர்களாகவும் கருதுகின்றனர்.

ஈஸ்டர் தீவின் சிறப்புக்களைப் பற்றி மேலும் பல செய்திகளை இப்பாடத்தின் வாயிலாகத் தெரிந்துகொண்டேன்.

அடுத்த விடுமுறையில் சந்திக்கலாம்.

இப்படிக்கு
உன் அன்பு நண்பன்/தோழி

உறைமேல் முகவரி

| |
|---|
| பெறுநர்<br>அன்பழகன்,<br>வடக்குத்தெரு,<br>புளியம்பட்டி,<br>பொள்ளாச்சி |

36. மணல் தீவை பசுமைத்தீவாக மாற்றிய ஜாதவ் அவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தன்று பள்ளிக்கு வருகைதர உள்ளார். அவரைப்பாராட்டி பாராட்டுரை ஒன்று தயார் செய்யுங்கள்.

**விடை :**

**பாராட்டுரை**

அனைவருக்கும் வணக்கம்!

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி நமது பள்ளிக்கு வருகைதந்துள்ள நமது சிறப்பு விருந்தினர் ஜாதவ் அவர்களைப்பற்றி ஒரு சில கருத்துக்களை உங்கள் முன் கூற விரும்புகிறேன்.

ஒரு புல் பூண்டு கூட இல்லாத மணல்திட்டில் தனது விடாமுயற்சியால் ஒரு அடர்ந்த காட்டினை உருவாக்கியவர் ஜாதவ். முதலில் மூங்கில் செடிகளை நட்டு தன் பசுமையாகத்தை ஆரம்பித்தார். பிரம்மபுத்திரா நதி நீரை ஊற்றி செடிகளை தன் பிள்ளைகளைப்போல வளர்த்தார் ஜாதவ். மண்ணின் தன்மையை மாற்றுவதற்காக மண்புழு, சிவப்பு எறும்புகள், கரையான்கள் இவற்றை சேகரித்து மண்ணில் விட்டார். அவரது விடாமுயற்சியால் மணல்காடு பசுமைவனமாக மாறியது. ஜாதவ் அவர்கள் செய்த இந்த சமூகசேவைக்கு இந்திய அரசாங்கம் பத்மஸ்ரீ விருது அளித்து பெருமைப்படுத்தியது.

அத்தகைய சிறப்புமிக்க ஜாதவ் அவர்கள் நமது பள்ளிக்கு வந்தது நமக்கு பெருமைதரும். அவரை மனதார பாராட்டி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

37. காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி வனத்துறை அதிகாரிக்கு ஒரு புகார்கடிதம் எழுதுங்கள்.

**விடை :**

**புகார் கடிதம்**

அனுப்புநர்

கணேசன்,
ஓமலூர்,
சேலம்.

பெறுநர்

வனத்துறை அதிகாரி,
சேலம் மாவட்டம்.

பொருள் :- காடுகள் அழிப்பதைத்தடுக்கக்கோரி.

மதிப்பிற்குரிய ஐயா,

எங்கள் ஊருக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் சிலர் மரங்களை வெட்டுவதாக அறிந்தோம். இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதால் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

மரங்களை அழிப்பதன் மூலம் மழை குறைகின்றது. அதனால் வறட்சி ஏற்படவும் வாய்ப்புள்ளது. மேலும் காடுகள் அழிக்கப்படுவதனால் வாயுமண்டலத்தில் பிராணவாயுவின் அளவு குறைந்து, கரியமிலவாயு அதிகரிக்கக் காரணமாகின்றது. இது புவிவெப்பமடைதலுக்கு காரணமாகவும் அமைகின்றது.

எனவே காடுகள் அழிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என,
கணேசன்,
ஓமலூர்.

ஓமலூர்,
12-02-2021.

38. “அப்போது
பூமியின் குரலும்
என் காதுக்கு எட்டியது
மனிதர் வாழ்வதும்
வாடகை பூமியில் தான்
எனது குழந்தையைக்
கொன்றது யார் எநக் குமறியது”

- இவ்வரிகள் உணர்த்தும் கருத்திற்கு விமர்சனக்குறிப்பு எழுதுங்கள்.

**விடை :**

**விமர்சனக்குறிப்பு**

கவிதாசன் அவர்கள் எழுதிய ‘வாடகை பூமி’ என்ற கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட வரிகளே இவை. மரங்களை அழிப்பதை மையமாகக் கொண்டு இக்கவிதை எழுதப்பட்டுள்ளது. சிலகாலங்கள் மட்டுமே மனிதர்கள் இந்த பூமியில் வாழ்கின்றனர். நாம் இந்த பூமியில் வாழ்வது வாடகைவீட்டில் இருப்பதுபோலத்தான். இந்த பூமியில் உள்ளவற்றை அழிப்பதற்கு மனிதர்க்கு எந்த உரிமையும் இல்லை என்பதை கவிஞர் இக்கவிதைவரிகளின் மூலம் உணர்த்துகிறார். மனிதர்களைப்போலவே மரங்களும் பூமித்தாயின் குழந்தைகளே. எனவே மரங்களை வெட்டக்கூடாது என்பதை கவிஞர் கவிதாசன் அவர்கள் இக்கவிதையின் மூலம் உணர்த்துகிறார்.

39. சிறுகதையின் ஆசிரியர் விஜயலட்சுமி அவர்களின் “காளி” எனம் சிறுகதையை விமர்சனம் செய்து ஒரு பாராட்டு கடிதம் எழுதுக.

**விடை :**

பாலக்காடு
20/02/2021

ஆசிரியர் விஜயலட்சுமி அவர்களே,

உங்களது காளி எனும் சிறுகதையைப் படித்தேன் சாலையோரங்களில் குடிசை கட்டி வாழும் சாதாரண ஏழை குடும்பங்களில் வாழ்க்கையை மையப்படுத்தி இக்கதையை அமைத்து உள்ளீர்கள். சேரிப்பகுதி எனப்படும் புறநகர்ப் பகுதிகளில் வாழும் மனிதர்களின் இயல்பான குணங்களை இக்கதையில் அழகாக படம்

பிடித்து உள்ளீர்கள். அனாதையாக பிறந்து, ஏழையாக வாழும் தன்மானத்தை விட்டுக் கொடுக்காத ஒரு பெண்ணாக 'காளி' எனும் கதாபாத்திரம் உங்கள் கதைக்கு வலு சேர்க்கின்றது.

சொந்தம் பந்தம் யாருமற்ற அனாதையாய் காட்டப்படும் காளி எனும் கதாபாத்திரம், கட்டிட வேலை செய்யும் இடத்தில் பாலா எனும் இளைஞனை காதலித்து திருமணம் செய்து கொள்கிறாள். யாரும் இல்லாத அனாதைகளுக்கு யாரேனும் துணை இருப்பார்கள் அது போன்று அன்னம்மா அக்கா என்ற பெண் கதாபாத்திரம் காளிக்கு உறுதுணையாக இருக்க அவளுடைய திருமணம் நடைபெறுகிறது தாய் தந்தை குடும்பம் என வாழும் பாலா தன்னை உயிராக நேசிக்கும் தாயின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் காளியை திருமணம் செய்து கொள்வதும் காளியை உயிருக்குயிராக நேசிப்பதும் தன் குழந்தை காளியின் வயிற்றில் வளர்வது கண்டு தினம் தினம் அவளை மகாராணியாக கவனித்துக் கொள்வது போன்ற நிகழ்வுகள் இக்கதைக்கு உயிரோட்டம் தருகிறது.

பாலா காளி திருமண வாழ்க்கை நல்ல விதமாக சென்று கொண்டிருக்கும் வேலையில் பாலாவின் திடீர் மரணம் கதையின் போக்கை மொத்தமாக மாற்றிவிடுகின்றது மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்த காளியின் வாழ்வில் பேரிடி என்னையும் சேர்த்து இக் கதையை வாசிக்கும் வாசகர் மனதையும் பாதிக்கின்றது. அதன்பின் காளியின் வாழ்வே கேள்விக்குறியாக மாறுகின்றது. குழந்தையின் முகத்தை கூட பார்க்க முடியாமல் பாலா இறப்பதாக இக்கதையை கொண்டு செல்வது வேதனை தரும் விஷயமாக உள்ளது.

"அம்மா அவள் ஐந்து மாதமாக மாசமாக இருக்கிறாள் எங்களுக்கு உங்களை விட்டால் யாருமா இருக்கின்றார்கள்? பழையவற்றை மனதில் வைத்துக் கொள்ளாமல் எங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பாலா தன் தாயிடம் கெஞ்சுவதும், பாலாவின் தாயார் அவற்றை கேட்காதது போல் இருப்பதும், அவர்களை மண்ணை வாரித் தூற்றுவது போன்ற செயல்கள் சேரிப் பகுதிகளில் வாழும் சாதாரண மக்களின் யதார்த்த நிலையை காட்டுகின்றது. பாலாவின் தாயார் அவனுடைய உடலை கொண்டு சென்று சடங்குகள் செய்வதும், காளியை மண்ணை வாரித் தூற்றுவது, உன் வயிற்றில் வளரும் குழந்தை நாசமாகப் போகும் என்று சபிப்பதும் நம் நெஞ்சை நெருட செய்கிறது.

பாலாவின் மரணத்திற்குப் பிறகு காளிக்கு சூர்யா எனும் ஆண் குழந்தை பிறக்க அக் குழந்தையோடும் இறந்து போன கணவர் பாலாவின் நினைவுகளோடும் நாட்களை நகர்த்தி வாழ காளிக்கு தைரியம் தருவதாக இக்கதையை கொண்டு சென்று உள்ளீர்கள். ஆனால் அக்குழந்தை மனவளர்ச்சி குன்றிய குழந்தையாக வளர்கிறது. குழந்தையுடன் திசைரி போராட்ட வாழ்க்கை வாழ்கின்றாள் கதாநாயகி காளி. ''மத்த குழந்தை எல்லாம் வளர்ந்திடும் எம்புள்ள எப்பவும் எனக்கு குழந்தையாய் இருக்கும். யாரு? என்ன நெனச்ச நமக்கென்ன? நம்ம புள்ளைய நாமே சீ ன்னு சொல்லக்கூடாது அது எங்கே போகும்? அவனுக்கு எல்லாமே நான் தான்'' என்று காளி கூறுவது நம் மனதை என்னவோ செய்கிறது.

காளி எனும் இச்சிறுகதை வாயிலாக காளி எனும் கதாபாத்திரம் ஒரு புதுமைப் பெண்ணாக எதையும் நேர்கொண்டு வாழ தயாராகும் துணிச்சல் நிறைந்த பெண்ணாக இக்கதையில் ஆசிரியரான நீங்கள் காட்டியுள்ளீர்கள் காளி என்ற பெயர் கதாபாத்திரத்திற்கு மிகவும் பொருந்தும் படியாக உள்ளது.

நீண்ட நாட்களுக்கு பிறகு நல்ல ஒரு கதை படித்த நிறைவு மனதிற்கு தோன்றுகிறது இனியும் இது போன்ற கதைகள் சமூகத்திற்கு நீங்கள் தொடர்ந்து படைக்க வேண்டும் என்று உங்களை என் சார்பிலும் எனது பள்ளியின் சார்பிலும் பாராட்டி கொள்கிறேன் நன்றி வணக்கம்.

இப்படிக்கு
உங்கள் வாசகன்

**அனுப்புனர்**
செந்தில்குமார்,
எஸ்.கே.ஹெச்.எஸ்.
பாலக்காடு.

**பெறுநர்**
ச.விஜயலட்சுமி
அனந்தபுரி
திருவனந்தபுரம்.

40. கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் வாழ்க்கை குறிப்பு எழுதுக.

ஒட்ட பிளாக்க்கள் நீலகண்டன் வேலு குருப்பு எனும் இயற்பெயருடைய திரு ஓ.என்.வி. குறுப்பு அவர்கள் மலையாள மொழியின் மிகச் சிறந்த கவிதை ஆசிரியர் ஆவார். 1931 ஆம் ஆண்டு மே மாதம் 31- ஆம் நாள் என் கிருஷ்ண குறுப்பிற்க்கும், கே.லட்சுமி குட்டி அம்மாவிற்கும் மகனாக திருவிதாங்கூரில் சாவற எனுமிடத்தில் பிறந்தார். அக்னி சிலபங்கள், அக்ஷரம் உப்பு பூமிக்கு ஒரு சரமகீதம் சுயம்வரம் உஜ்ஜயினி போன்றவை சிறந்த படைப்புகள் ஆகும் மனைவி சரோஜினி அம்மையார், குழந்தைகள் ராஜீவன் மாயாதேவி போன்றோர் ஆவர். இந்திய அரசால் இலக்கியத் துறை சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான பத்ம விபூஷண் பத்மஸ்ரீ ஞானபீடம் போன்றவற்றை பெற்றவர் என்பது பெருமைக்குரிய விஷயமாகும். இத்தனை புகழ் பெற்ற இக்கவிஞர் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாள் தனது 84 ஆம் வயதில் இயற்கை எய்தினார். மலையாள இலக்கியத்தின் ஈடு இணையற்ற கவிஞராக ஓ.என்.வி குறுப்பு அவர்கள் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

**விடை :**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | : | ஓ.என்.வி. குறுப்பு |
| இயற்பெயர் | : | ஒட்டப்பிலாக்கள் நீலகண்ட வேலு குறுப்பு |
| பெற்றோர் | : | ஓ.என்.கிருஷ்ண குருப்பு,<br>லட்சுமி குட்டி அம்மையார் |
| பிறந்த ஆண்டு | : | 1931 மே 31 |
| பிறந்த இடம் | : | திருவிதாங்கூர், சாவற |
| மனைவி | : | சரோஜினி அம்மையார் |
| பணி | : | பேராசிரியர், கவிஞர் |
| படைப்புகள் | : | அக்னி சிலபங்கள், அக்ஷரம், உப்பு, பூமிக்கு ஒரு சரமகீதம், உஜ்ஜயினி |
| பெற்ற விருதுகள் | : | ஞானபீடம், பத்மஸ்ரீ, பத்மவிபூஷண் |
| மறைவு | : | 2016 பிப்ரவரி 13-ஆம் நாள் |

41. “சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை.
மெல்லத் தமிழினி சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்”

**பாரதியார்**

**இக்கவிதை வரிகளை படித்து விமர்சனக் குறிப்பு எழுதுக.**

**விடை :**

## விமர்சனம்

தமிழ் மொழியை தோன்றிய காலத்தில் இருந்த நிலையும் தற்போதைய நிலையும் கண்டு பாரதியார் மனம் குமுறுகின்றார். நம் தமிழ் மொழியானது ஆதிசிவனாள் பெற்ற எடுக்கப்பட்டது. ஆரிய மைந்தன் அகத்தியன் என்னும் வேதியனால் இலக்கணம் அமைக்கப்பட்டது. சேர, சோழ, பாண்டியர்களால் சங்கம் வைத்து வளர்க்கப்பட்டது. அகம் புறமே என்னும் அடிப்படையில் தீஞ்சசுவை காவியங்கள் எழுதப்பட்டு தமிழ் பெண் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். அவளுடன் பிறந்த ஏனைய மொழிகள் அழிந்துபோனாலும் தமிழின் புகழ் பல தேசங்கள் கடந்து பேசப்பட்டு வீறு நடைஇட்டது. அவ்வாறு தொகையும், பாட்டும் காப்பியங்களும், அற இலக்கியங்களும், பக்தி இலக்கியங்களும் ஆக உலக பெருமையுடன் வளர்ந்த தமிழ் இன்று வெளிநாட்டவர் வருகைக்குப்பின் தனது வளர்ச்சியில் மெத்தனப் போக்கை கண்டுள்ளது. வெளிநாட்டு இலக்கியங்களின் வளர்ச்சி தமிழ் மொழிக்கு இல்லை. இதனால் தான் மெல்ல தமிழ் இனி சாகும் மேற்கு மொழிகள் நம்மை ஆட்கொள்ளும் என்று வேதனைப்படுகிறார் பாரதி. இந்நிலை மாற நம்மைப் போன்ற இளைய தலைமுறையினர் தமிழை தமிழ் தாயை மறவாது வாழ வேண்டும். என்றாலே தமிழ் சிறந்து வளர்ந்து ஓங்கும் என்றும் கூறுகின்றார். பல தேதங்கள் பேசப்படும் மொழி நம் தமிழ்மொழியே ஆகும் எனவே பல நாடுகளுக்கும் சென்று அங்கு இருக்கும் கலைச் செல்வங்கள் அனைத்தையும் கொண்டுவந்து தமிழ் மொழிக்கு சேர்க்க வேண்டும் தமிழில் அன்றாட அறிவியல் கண்டுபிடிப்புகளின் பெயர்கள் தோன்றிய வண்ணம் இருக்க வேண்டும் காலகட்டத்திற்கு ஏற்ப தமிழும் மாற வேண்டும். நம்மை போன்றவர்கள் தமிழுக்கு பெருமை சேர்க்கை வேண்டும். தமிழில் புதிய இலக்கியங்கள்

தினசரி தோன்றிய வண்ணம் இருக்க வேண்டும் என்றும் பாரதி கூறுகின்றார்.

42. **நயம் பாராட்டுக.**

காலத்தை கடந்த மொழி கற்போர் நெஞ்சை
கவரும் மொழி தரை கடந்து கடல் கடந்து
ஞானத்தை வென்ற மொழி என்றும் குன்றா
நாவன்மை படைத்த மொழி இலக்கணத்தின்
கோலத்தை முழுமைபெற வடித்துக் காட்டும்
குறைவில்லா அறிவு மொழி இலக்கியத்தின்
மூலத்தை கண்ட மொழி சுவைகள் விஞ்சும்
மும்மை மொழி அன்பு மொழி தமிழே ஆகும்.

**முடியரசன்**

**விடை :**

## நயம் பாராட்டுக

### பொருள் நயம்

ஆசிரியர் தமிழ் மொழியின் சிறப்பு பற்றி கூறியுள்ளார் என்று பிறந்தவள் என்று அறியமுடியாத காலம் கடந்த மொழி தமிழ் மொழி. கற்பவர்களின் நெஞ்சை கவரும் இனிமையான மொழி. தமிழ் மொழி தமிழ்நாடு மட்டுன்றி மலேசியா சிங்கப்பூர் இலங்கை போன்று கடல் கடந்த நாடுகளில் பேசப்படும் மொழி தமிழ் மொழி. உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் சிறந்த மொழி இலக்கியம் தோன்றும் முன்பே சிறப்பான இலக்கணம் தோன்றிய அறிவு மொழி. உலகம் போற்றும் திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் கண்ட மொழி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட செம்மொழி அதுவே நம்முடைய தமிழ் மொழி என்று தமிழ் மொழியின் சிறப்பை கூறுகின்றார்.

### எதுகை நயம்

காலம் ஞாலம் கோலம் மூலம் போன்று இரண்டாவது எழுத்துக்கள் ஒரே போல் வரும் சொற்கள் இக்கவிதைக்கு எதுகை நயம் அளிக்கின்றது.

### மோனை நயம்

காலம்-கோலம், முழுமை-மூலம் போன்ற முதலெழுத்துக்கள்

ஒரே போல் வரும் சொற்கள் இக்கவிதைக்கு மோனை நயம் பயக்கிறது.

**ஓசை நயம்**

கடந்த மொழி வென்ற மொழி அறிவு மொழி செம்மொழி அன்பு மொழி மும்மை மொழி என்று மொழி மொழி என்ற சொற்கள் தொடர்ந்து வந்து இக்கவிதைக்கு ஓசைநயம் அளிக்கின்றது.

**எனது கருத்து**

வரும் தலைமுறையினர் தமிழ்மொழியின் பெருமையை உலக அளவில் எடுத்துச் செல்ல வேண்டும் எனும் நோக்கில் ஆசிரியர் இக்கவிதையை அமைத்துள்ளார். தமிழ் மொழியின் சிறப்புகளை பற்றி சிறு கவிதை மூலம் தெள்ளத்தெளிவாக காட்டியுள்ளார். தமிழ் மொழி கற்போம் தமிழ் மொழி பேசுவோம் தமிழை வளர்ப்போம்.

**ஐந்து மதிப்பெண்களுக்கான வினாக்கள்.**

43. இயற்கை வளங்களை அழிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் குறித்து தலையங்கம் எழுதுங்கள்.

**விடை :**

**தலையங்கம்**

## தினமலர்

**24-02-2021 (புதன்கிழமை)**

இயற்கையை காப்போம்

இயற்கை என்பது கடவுள் நமக்குத் தந்த வரப்பிரசாதமாகும். நிலம், நீர், காற்று இவை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளாகும். ஆனால் மனிதர்களாகிய நமது செயல்பாடுகளால் இயற்கையும் நமது சுற்றுப் புறமும் அழிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் என்ற எமன் மண்ணில் புதைந்து மண்ணின் மலட்டுத்தன்மைக்குக் காரணமாகின்றது. தொழிற்சாலைக் கழிவுகள் மண்ணையும் நீரையும் ஒருசேர நாசமாக்குகின்றது. இயற்கை உரங்களுக்கு பதிலாக செயற்கை உரங்களை இடுவதால் மண் பாசுபட்டு அது மனிதனின் நோய்களுக்கு காரணமாகின்றது.

இன்றைய பெரும் பிரச்சனை குடிநீர் மாசடைவதும் காற்று மாசடைவதுமாகும். நாம் சுவாசிக்கும் காற்று தொழிற்சாலை மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேளும் புகையினால் மாசடைந்து ஓசோண் படலத்தையே ஓட்டையாக்குமளவிற்கு ஆபத்தாகி வருவதைக்காண்கின்றோம். மேலும் காற்றில் கரியமிலவாயு கலந்து புவி வெப்பமடைதலுக்கும் காரணமாகின்றது.

இயற்கை வளங்களான நீர், காற்று, மண் இவற்றை அழிவிலிருந்து பாதுகாக்கவில்லை என்றால் மனிதர்க்கு மட்டுமல்ல அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கும் அது ஆபத்தாக அமையும். எனவே ஒவ்வொருவரும் அவரது வீட்டையும் வீட்டின் சுற்றுப்புறத்தையம் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். பிளாஸ்டிக் பொருட்கள் பயன் படுத்துவதைத்தவிர்க்கவேண்டும். மரங்கள் நட்டு வளர்ப்பதை தமது கடமையாகக் கருதவேண்டும்.

இயற்கையை

இயற்கையாகவே நிலைநிறுத்தினால் மட்டுமே இயற்கை வளங்களை நாம் என்றும் நிலைநிறுத்த முடியும். இயற்கையை காப்போம்.

44. **ஆங்கில நாடக எழுத்தாளர் ஷேக்ஸ்பியரின் அந்தோணி கதாபாத்திரத்தின் பேச்சாற்றலையும் கம்பராமாயணத்தில் கூனி கதாபாத்திரத்தின் பேச்சாற்றலையும் ஒப்பிட்டு கட்டுரை எழுதுக.**

**விடை :**

## ஒப்பிட்டு கட்டுரை

ஷேக்ஸ்பியர் ஆசிரியரின் கதாபாத்திரமான அந்தோணி தன்னுடைய பேச்சு திறமையால் நியாயத்தை நிலை நாட்டுகிறார் அதேபோல் கம்பராமாயணத்தில் கம்பர் தன்னுடைய கூனி எனும் கதாபாத்திரத்தில் பேச்சுத்திறமையால் ஒரு நாட்டின் தலையெழுத்தையே மாற்றி விடுகிறாள் எவ்வாறு என்று காண்போம்.

வீரத்தால் மக்கள் மனதை கவர்ந்தவன் சீசர் சீசரின் புகழில் பொறாமை கொண்டவன் காசியஸ். சீசரை அழிக்க முற்படுகின்றான் சீசருடைய நெருங்கிய நண்பனான புரூட்டசை துணையாகக் கொண்டு

சீசரை கொலை செய்கின்றான் மக்கள் சீசரை கொன்றவனை பழிவாங்க துடிதுடித்து ஓடி வருகின்றனர் அவர்கள் முன புரூட்டஸ் குற்றவாளியாக நிற்கின்றான் அம்மக்களை தன் பேச்சுத் திறமையால் ஏமாற்றி நல்லவனாக மாற நினைக்கின்றான் அவன் மக்களைப் பார்த்து மக்களே! நான் ஏன் சீசரை கொன்றேன் தெரியுமா? நீங்கள் சீசர் மீது கொண்டிருந்த அன்பை விட நான் கொண்டிருந்த அன்பு உயர்ந்தது அவ்வாறு இருந்தும் நான் ஏன் சீசரை கொலை செய்தேன் ஏனென்றால் சீசர் நம் அனைவரையும் அடிமைகளாக மாற்ற நினைத்தான் எதிரி நாட்டவர்களுக்கு உங்களை அடிமைகளாக செய்ய நினைத்தால் அதனால் நான் சீசரை கொலைசெய்தேன் இங்கு இக்கூட்டத்தில் யாரேனும் அடிமைகளாக இறக்க விரும்புகிறீர்களா அடிமைகளாக இறக்க விரும்பும் எக் கீழ்மகன் யாரேனும் உண்டா? இருந்தால் கூறுங்கள் நீங்கள் என்னை தாராளமாக கொலை செய்யலாம் என்று கேட்கின்றான். புரூட்டஸின் பேச்சை மக்கள் நம்புகின்றனர் அடிமைகளாக இருக்க விரும்பவில்லை, நீ செய்தது சரியே, என்று கூறுகின்றார்கள் நினைத்ததை சாதித்தான் புரூட்டஸ். அந்நேரத்தில் சீசரின் மற்றொரு நண்பன் அந்தோணி புரூட்டஸ் சூழ்ச்சிகளை அறிந்து அங்கு வருகின்றான் நிலைமையை தனக்கு சாதகமாக அமைத்துக் கொள்ள பேச்சை துவங்குகிறான் புரூட்டஸ் நன்மகன் சீசர் கொடியவன் அதை பற்றி பேசவே நான் இங்கு வந்தேன் என்று தன் பேச்சை துவங்குகிறான் புரூட்டஸ் அந்தோணியை பேச அனுமதிக்கிறான்.

அந்தோணி தொடர்கிறான் முன்பு ஒரு முறை சீசர் தனக்கு ஆட்சி கிடைத்த போது அதை தான் விரும்பாமல் இருந்தான் சீசர் கொடியவன், நல்லவன் புரூட்டஸ். போரில் கிடைத்த பணத்தை தன் பெயரில் எடுத்துக்கொள்ளாமல் உங்களுடைய கருவூலத்தில் நிலைதான் சீசர் அவன் கொடியவன் என்கிறான் புரூட்டஸ் புரூட்டஸ் நல்லவன் இனி ஒரு செய்தி உங்களிடம் கூறலாம் என்று இங்கு வந்தேன் சீசர் இறுதியாக எழுதிய உயில் என் கையில் கிடைத்தது ஆனால் அதை நான் படிக்க விரும்பவில்லை ஏனென்றால் அதைப் படித்தால் சீசரை கொன்றவர்களை நீங்கள் பழிவாங்க முற்படலாம் எனவே நான் அதைப் படிக்கவில்லை என்று தன் வாதத்தை முடிக்கிறான். ஆனால் மக்கள் அந்த உயிலை படிக்கும்படி வற்புறுத்துகின்றனர் அந்தோணி உயிலை படிக்கிறான் தன்னுடைய காலத்திற்குப் பிறகு தன்னுடைய சோலையை இந்நாட்டு மக்களும் அவர்களுடைய சந்ததியினரும்

பயன்படுத்திக்கொள்ளலாம் அவர்கள் பெயரில் தன்னுடைய சொத்துக்களை எழுதி வைக்கின்றேன் மேலும் ஒவ்வொரு மக்களுக்கும் சொந்தமாக 70 பொறக்காககளை கொடுக்கின்றேன் என்றும் எழுதியுள்ளார் இதைக்கேட்டதும் மக்கள் சீசர் மீது கொண்டிருந்த அன்பால் புரூட்டஸையும் மற்றவர்களையும் கொலை செய்ய முற்படுகின்றனர் அந்தோணி தான் வந்த காரியத்தை கலபமாக தன் பேச்சுத் திறமையால் வெற்றி அடைகிறான் இவ்வாறு ஆசிரியர் அந்தோணியின் கதாபாத்திர பேச்சு திறமையை அழகாக காட்டுகிறார்.

இதேபோன்று கம்பராமாயணத்தில் கம்பர் கூனி எனும் கதாபாத்திரத்தை எவ்வாறு காட்டிகின்றார் பார்ப்போம் தசரதனுக்கு கோசலை கைகேயி, சுமித்திரை என மூன்று மனைவிமார்கள் கோசலையின் மகனான ராமனுக்கு முடிசூட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்கிறான் தசரதன் ராமன் மீது வெறுப்பு கொண்ட கைகேயியின் பணிப்பெண்ணான கூனி கைகேயியின் மனதை மாற்றுகிறாள். முதலில் உறங்கிக் கிடக்கும் கைகேயியை, ‘‘பேரிடர் பிணிக்க உறங்குகிறாயோ? பேதாய்’’ என்று கூறுகிறாள். கைகேயியோ இராமனை பெற்ற எனக்காக இடர்? என்று கூறுகிறாள். இராமன் நாளை முடிசூட போகின்றான் என்கிறாள். பரதன் தரையில் இருக்க சீதை கணவன் அரியாசனத்தில் இருப்பான் என்கிறாள் தன்னுடைய குழந்தைக்கு அழிவு வருவதை எந்தத் தாயும் பொறுத்துக் கொள்ள மாட்டாள் எனவே கூனி இந்த அம்பை பயன்படுத்துகின்றாள். ஆனால் கைகேயியின் மனம் மாறவில்லை. இராமனை தன் மகனாகவே நினைக்கிறாள் சக்களத்தி வாழ்வு சண்டை என்பது கூனியின் அடுத்த அன்பு கோசலை நன்றாக வாழ்வாள் உன்னுடைய வாழ்க்கை கெட்டுப் போகும் இராமன் முடிசூடினால் என்கிறாள். ஆனால் கோசலையை தனது சகோதரியைப் போல் எண்ணும் கைகேயி மனம் மாறவில்லை. இறுதியாக பெண்களுடைய இயல்பை நன்கு அறிந்த கூனி கைகேயி சீதையினுடைய தந்தைக்கும் உனது தந்தையின் நாடான கேகேய நாட்டிற்கும் முன்பே பகை உண்டு. இப்போது ராமன் முடிசூடிவிட்டால் சீதையினுடைய தந்தை உன் நாட்டின் மீது படையெடுத்து அழித்து விடுவார் என்று கூறுகின்றாள். தன்னுடைய பெற்றோர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தீங்கு வருவதை எந்த பெண்ணும் பொறுக்க மாட்டாள் எனவே கைகேயி மனம் மாறுகிறது. தசரதன் வருகின்றான். முன்பு தசரதன் தந்த இரண்டு வரங்களை இப்போதே

தரவேண்டும் என்றுகேட்கின்றாள். ஒரு வாரம் நாளை பரதனே முடிசூட வேண்டும் என்றும் இரண்டாம் வரம் இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்குச் செல்ல வேண்டும். இதை கேட்டதும் தசரதன் அவளிடம் வரங்களை மாற்றிக் கொள்ளும்படி கேட்கிறான். மன்றாடுகிறான் ஆனால் மனம் மாறவில்லை. தசரதன் உிருக்கு உயிரான கையை வாயில் வந்தபடி திட்டுகிறான். ஆனாலும் கைகேயி மனம் மாறவில்லை. இறுதியாக அவள் காலில் விழுந்து கெஞ்சி கூத்தாடுகின்றான் அப்பொழுதும் கைகேயி மனம் மாறவில்லை. ஏனென்றால் கூறி பேசிய பேச்சு அவளுடைய ஆழ்மனதில் தங்கி நிற்கின்றது அந்த பணிப்பெண்ணின் பெண்களின் இயல்பை அறிந்த அவளின் பேச்சை வெல்லக்கூடிய எந்தவிதமான சக்தியும் நாட்டின் அரசனான தசரதனின் பேச்சில் இல்லை எனவே கூனி தன் பேச்சு திறமையால் தான் நினைத்ததை சாதித்துக் கொண்டாள்.

புரூட்டஸின் பேசசில் என்ன நிலையை கண்டோமா அதைத்தான் தசரதன் பேச்சில் கண்டோம் அடிமைகள் வீரம் போன்ற உயர்ந்த நிலை சொற்கள் புரூட்டஸின் பேச்சில் இருந்தது தசரதனும் தன் மனைவியான கைகேயிடம் முதலில் கெஞ்சுவதும், பின்பு அவளை திட்டுவதும் ஆன பேச்சுகளால் தோற்றுப் போகின்றான். ஆனால் அந்தோணியின் பேச்சு சாதாரண மக்களுக்கு ஏற்ற பேச்சாக இருந்தது. சாதாரண மக்களுக்கு பணம் என்பது ஒரு மிகப்பெரிய விஷயம் ஆகும். எனவே, அதை மக்கள் முன் நிறுத்தி அந்தோணி பேசி வெற்றி பெறுகின்றான். அதேபோல் கூறி கைகேயியுடைய பெற்றோர்கள் மீது உள்ள பாசத்தை முன்னிறுத்தி தன்னுடைய பேச்சில் வெற்றி பெறுகின்றாள்.

ஷேக்ஸ்பியருடைய அந்தோணி எனும் கதாபாத்திரத்தின் பேச்சாற்றலையும் கம்பராமாயணத்தில் கம்பருடைய கூனி கதாபாத்திரத்தின் பேச்சாற்றலும் ஒரு சிறிய வித்தியாசம் மட்டுமே உள்ளது. ஷேக்ஸ்பியரின் உடைய அந்தோணி இரண்டாவதாக பேசுகின்றான் புரூட்டஸ் முதலாவதாக பேசுகின்றான் எப்பொழுதும் இரண்டாவதாக பேசுபவர்களுக்கு வாய்ப்பு அதிகம் அதை அந்தோணி பயன்படுத்திக் கொண்டான். ஆனால் கம்பர் கதாபாத்திரமான கூனி முதலில் பேசுகின்றாள் இரண்டாவதாக பேச வாய்ப்புக் கிடைக்கும் மாபெரும் நாட்டின் அரசனான தசரதன் சாதாரண பணி பெண்ணினுடைய பேச்சிற்கு முன்னால் தோற்றுப் போகிறான். அவ்வளவு சிறப்பாக கம்பர் தன்னுடைய கதாபாத்திரத்தின் பேச்சுத்

திறமையை அழகாக அமைத்துள்ளார். இதுபோன்ற இலக்கியங்களை எல்லாம் நாம் படித்து அவற்றில் உள்ள கதாபாத்திர ஒப்பீடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் நம் மனம் இலக்கியம் பால் கொள்ளை இன்பம் பெறும்.

45. பள்ளிக்கலைவிழா சார்பாக நிகழ இருக்கும் போட்டிக்காக '**செம்மொழி தகுதியும் செந்தமிழும்**' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**விடை :**

## செம்மொழி தகுதியும் செந்தமிழும்

### முன்னுரை

நம் அனைவரின் தாய்மொழியாம் தமிழ்மொழி செம்மொழியாக 2004 -ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது ஒரு மொழி செம்மொழியாக தகுதி பெறுவதற்கு பல்வேறு தகுதிப்பாடுகள் வேண்டும் அவை எவை என்பதையும் நம் தமிழ் மொழி எவ்வாறு செம்மொழியாக தகுதி பெற்றுள்ளது. என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.

### செம்மொழி தகுதிப்பாடுகள்

1. தொன்மை 2. பிறமொழித் தாக்கம் இன்மை 3. தாய்மை 4.தனித்தன்மை 5. இலக்கிய வளம் இலக்கணச் சிறப்பு 6. பொதுமைப் பண்பு 7. நடுநிலைமை 8. பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு 9.உயர்சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு 11.மொழிக் கோட்பாடு என பதினொன்று தகுதி கோட்பாடுகளை அறிவியல் தமிழ் அறிஞர்கள் மொழி வல்லுனர்கள் வரையறுத்துள்ளார்.

### தொன்மை

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ் என்று தமிழின் காலத்தை வரையறுத்து இருக்கின்றார்கள் மொழியியலாளர்கள். மனிதன் தோன்றியது குமரிக்கண்டம் அவன் பேசிய மொழி தமிழ் மொழி என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முதல் இடை கடை சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தார்கள். இவ்வாறு சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் இருந்தது என்பதற்கு எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சான்றாக அமையும். எனவே, தமிழ் மொழி தொன்மையான மொழி

ஆகவே அதனை என்றுமுள தென்தமிழ் என்பார் கம்பர். முதல் தகுதி பாடு தமிழ்மொழி பெற்றுள்ளது.

## பிறமொழித் தாக்கம் இன்மை

காலத்திற்கு ஏற்ப மொழி கலப்பினை உடையதாககிறது. ஆங்கிலத்தில் எண்ணற்ற பிறமொழிச் சொற்கள் உள்ளன. நம்முடைய பாரத தேசத்தின் வட மொழியிலும் தமிழ் பிராகிருதம் பாலி போன்ற மொழிச் சொற்கள் கலந்துள்ளன. இவ்வாறு தமிழிலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பிறமொழி சொற்களை நீக்கினால் மொழிகள் இயங்காது. ஆனால் தமிழ் ஒன்றே பிறமொழி சொற்களை நீக்கினாலும் இனிதாக இயங்க வல்லது நாளுக்கு நாள் புதுப்புது கலைச்சொற்கள் தமிழில் உருவாக்கிய வண்ணம் உள்ளது.

## தாய்மை

திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாலம், துளு முதலிய மொழிகளுக்குக் தாய் மொழியாக நம் தமிழ்மொழி திகழ்கின்றது. 1800 மொழிகளுக்கு வேர்ச் சொற்களையும் 109 மொழிகளுக்கு உறவு பெயர்களையும் தந்துள்ளது தமிழ் என்பார் கால்டுவெல். ஆகவே உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழியாக தமிழ்மொழி திகழ்கின்றது.

## தனித்தன்மை

நம் பண்டைய தமிழ் புலவர்கள் அகம் புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தவர்கள் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மனித இனத்திற்கு வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்து அளித்தது தமிழ் மொழியின் பழமையும் பெருமையும் எந்த மொழிக்கும் இல்லை இவ்வாறு இலக்கிய இலக்கண வளம் கொண்டு தனித் தன்மையோடு விளங்கும் மொழி தமிழ்மொழியே ஆகும்.

## இலக்கிய வளம் இலக்கணச் சிறப்பு

உலக இலக்கியங்களுள் முதன்மை பெயருடையது தமிழின் சங்க இலக்கியங்கள் ஆகும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இதற்கு உதாரணம் ஆகும் இவ்வளவு பெரிய நூல்கள் வேறு எந்த மொழியிலும் இல்லை என்றே கூறலாம் அதுபோல அகத்தியம் தொல்காப்பியம் நன்னூல் போன்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கண

சிறப்பும் உடைய மொழி தமிழ்மொழியே ஆகும். தமிழில் எழுத்து சொல் பொருள் ஆகிய மூன்றுக்கும் இலக்கணம் கூறுகிறது தொல்காப்பியம். எனவேதான் இவற்றை கண்டு தமிழ் மொழி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி இருக்க வேண்டும் என்று அனைவரும் கருதுகின்றனர்.

## பொதுமைப் பண்பு

தமிழர்கள் தமக்கென வாழாமல் உலக பற்று உடையவர்களாக வாழ்ந்தனர் என்பதற்கு தமிழ் இலக்கியங்களில் வரும் சான்றுகள் ஏராளம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும் செம்புலப் பெயல் நீர் போல் அன்புடைய நெஞ்சம்தான் கலந்ததுவே என்றும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் வரிகள் அமைத்து தமிழின் பொதுமைப் பண்பை நிலை நாட்டினார் புலவர்கள்.

## நடுநிலைமை

சங்க இலக்கியங்கள் இனம் மொழி மதம் கடந்தவை இயற்கையோடு இயைந்த உலகத்தார் ஏற்கும் பொது கருத்துக்கள் உடையவை மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துக்கள் உடைய மொழி நம் தமிழ்மொழி.

## பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு

சங்க படைப்புகள் வெறும் கற்பனை படைப்புகள் அல்ல. அவை மனிதனின் வாழ்க்கை பட்டறிவின் வெளிப்பாடு பொருந்தி வருவன. நிலையாய் நிற்பன, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் பிறன் மனை நோக்காத பண்பு முதலிய பண்பாட்டு நெறிமுறைகளை வெளிப்படுத்தும் மொழி நம் தமிழ்மொழி.

## உயர் சிந்தனை

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் அன்பே அறமாகும் எனும் வள்ளுவனின் வாக்கும் மக்கட் பண்பில்லாதவர் மரம் போன்றவர் என்றும் கூறுவதன் மூலம் தமிழ் மொழியில் உயர் சிந்தனை கருத்துக்கள் அடங்கியுள்ளது என்பது தெளிவாகும்.

## கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு

குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரத்தில் கலைகளைப் பற்றி இளங்கோவடிகள் அழகாக கூறிச் செல்கின்றார் அதுபோன்று

காப்பியங்களிலும் தமிழனுடைய கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு நாம் உணரலாம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனும் அறநெறியை உலகோர்க்கு உணர்த்தும் நூல் சிலப்பதிகாரம் நடனத்தை பற்றியும் கட்டட கலைகளைப் பற்றியும் அக்கால நாகரீகம் பற்றியும் அழகாக கூறும் நூல்கள் தமிழில் ஏராளம் உண்டு.

## மொழிக் கோட்பாடு

தொல்காப்பியம் கூறும் எழுத்து பிறப்பு முறைகள் உலக மொழி வல்லுனர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. எக்காலத்திற்கும் பொருந்தும் மொழியியல் கோட்பாடுகள் தமிழர்தம் மொழித்திறன் ஆராயத்தக்கது என்பார் ஏமினோ.ஒரு மொழிக்கு 33 ஒலிகள் இருந்தாலே போதும். ஆனால் தமிழோ 500 ஒலிகளைக் கொண்டுள்ளது. இது மனித உணர்வுகள் அனைத்தையும் எண்ணியவாறு வெளிப்படுத்த போதுமானது என்பது மொழிநூலார் கருத்து இவ்வாறு மிகச்சிறந்த மொழி கோட்பாட்டை உடைய மொழி தமிழ் மொழி.

## முடிவுரை

இவ்வாறு செம்மொழிக்கான பதினோரு கோட்பாடுகளும் முற்றிலும் பொருந்துமாறு அமைந்த ஒரே மொழி தமிழ் மொழி இத்தனை சிறப்பு மிக்க தமிழ் செம்மொழி என அறிவிக்க வேண்டும் என்ற முயற்சி 1901 இல் தொடங்கி 2004 வரை தொடர்ந்தது நடுவண் அரசு 2004 ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக அறிவித்தது தமிழ் கற்கும் நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டிய ஒரு விஷயம் ஆகும் தமிழ் மொழியால் நாம் உலக அளவில் பெருமை கொண்டுள்ளோம் என்று கூறி இக்கட்டுரையை முடிக்கிறேன்.